# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 31
ஏப்ரல் 2011

தொகுப்பு : Dr. B. வில்லியம் தர்ம ராஜா

**நீதிமொழிகள்**

1501 கர்த்தருக்குப் பயப்படு; அதினால் உனக்கு திட நம்பிக்கை உண்டு; உன் பிள்ளைகளுக்கு அடைக்கலம் கிடைக்கும் (14:26)
1502 கர்த்தருக்குப் பயப்படு; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம் (14:27)
1503 கர்த்தருக்குப் பயப்படு; அதினால் நீ தீமையை விட்டு விலகுவாய் (16:6)
1504 கர்த்தருக்குப் பயப்படு; அது ஜீவனுக்கேதுவானது; தீமை உன்னை அணுகாது (19:23)
1505 தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம் (22:4)
1506 நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு (23:17)
1507 நீ கர்த்தருக்கு ராஜாவுக்கும் பயந்து நட (24:21)
1508 கர்த்தரின் போதகத்தை மறவாதே (3:1)
1509 நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே (3:11)
1510 கர்த்தர் கடிந்து கொள்ளும் போது சோர்ந்து போகாதே (3:11)
1511 கர்த்தருக்கு அருவருப்பான மாறுபாடுள்ள இருதயம் (evil-minded) உடையவனாயிராதே; அவருக்குப் பிரியமான உத்தம மார்க்கத்தானாயிரு (11:20)
1512 கர்த்தரிடத்தில் தயை பெற நல்லவனாயிரு; துர்ச்சிந்தனைகளுள்ளவனாயிராதே (12:2)
1513 கர்த்தருக்கு அருவருப்பான பொய் உதடுகளைக் களைந்துவிடு (12:22)
1514 நீதியைப் பின்பற்று; அவனைக் கர்த்தர் நேசிக்கிறார் (15:9)
1515 கர்த்தரை நம்பு; அவன் பாக்கியவான் (16:20)
1516 கர்த்தரை நம்பு; செழிப்பாய் (28:25)
1517 கர்த்தரை நம்பு; உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவாய் (29:25)
1518 கர்த்தருக்கு அருவருப்பான வெவ்வேறான நிறைகல்லும் வெவ்வேறான மரக்காலும் வேண்டாம் (20:10,23)
1519 கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவாகாதே (22:14)
1520 கர்த்தரைத் தேடு (28:5)
1521 ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணாதே (1:7)
1522 ஞானத்தை வெறுக்காதே (1:22)
1523 ஞானத்தைக் கண்டடை; புத்தியைச் சம்பாதி; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல (3:13,15)
1524 மெய்ஞ்ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக் கொள் (3:21)
1525 ஞானவானாயிரு; கனத்தைச் சுதந்தரிப்பாய் (3:35)
1526 ஞானமே முக்கியம்; ஞானத்தை சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள் (4:5,7)
1527 ஞானத்தையும் புத்தியையும் மேன்மைப்படுத்து; அவை உன்னை மேன்மைப்படுத்தும் (4:8)
1528 ஞானத்தையும் புத்தியையும் தழுவிக் கொள்; அவை உன்னைக் கனம்பண்ணும் (4:8)



# திருமறைத் தேடல் - 8

1. என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும் என்றது யார்?
2. நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ் செய்தோம் என்றது யார்?
3. நான் இந்த முறை பாவம் செய்தேன். என்றது யார்?
4. நான் பாவஞ்செய்தேன் என்றது யார்?
5. நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றது யார்?
6. பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவஞ்செய்தேன் என்றது யார்?
7. தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றது யார்?
8. நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்றது யார்?
9. நாடோறும் கன்னிமாடத்து முற்றத்துக்கு முன்பாக உலாவுவான் – இவன் யார்?
10. சாலமோனுடைய மண்டபத்தில் உலாவிக் கொண்டிருந்தது யார்?
11. இவன் செய்கைகளில் வல்லவனாயிருந்தான் அவன் யார்?
12. குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான் – யார்?

- *சரியான பதிலை எழுதி தபாலில் மட்டும் அனுப்புங்கள். வசன இருப்பிடம் தவறாது குறிப்பிடுங்கள். அஞ்சல் அட்டையில் எழுத வேண்டாம்.*
- *கவரில் பதிலை பெரிய பேப்பரில் முழுதாள் பயன்படுத்தி கோப்புகளில் வைக்க வசதியாக எழுதுங்கள்.*
- *தெளிவான விலாசம் எழுதுங்கள்.*
- *வயது, படிப்பு, தொழில் விபரம் தெரிவியுங்கள்.*
- *பரிசு உண்டு. விதிகளுக்கு உட்பட்டது. (யாவரும் பங்கு பெறலாம்)*

**பதில் எழுத வேண்டிய முகவரி :**

Dr.P.T.R. **தியோபிலஸ் ரோஜர்** ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்,
ஆபிரகாம்நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101. போன். 94432-89026

**சென்ற மாத பதில்கள்**

| | | |
|---|---|---|
| 1. லூக்கா 5:10, மாற்கு 10:35 | 2. பிரசங்கி 7:26 | 3. 1இரா. 18:24 |
| 4. ஆதி. 36:25 ஆனகு | 5. நீதி. 27:7 சாலமோன் | 6. யோவேல் 1:5 யோவேல் |
| 7 யோபு 6:2 யோபு | 8. 2நாளா. 26:9 உசியா | 9. கேள்வி இல்லை |
| 10. ஆதி. 38:29 பாரேஸ் | | |

**பரிசு பெற்றவர்கள்**

| | |
|---|---|
| முதற்பரிசு | **திருமதி. குணசீலி அப்பாத்துரை,** தூத்துக்குடி |
| | **திரு. பிலிப்,** சென்னை |
| 2வது பரிசு | **செல்வி. பார்லின் பிரியா அன்னாள்,** சுப்பிரமணியபுரம் |
| | **செல்வி. செல்வ பெர்சியா,** மஞ்சம்பட்டி |
| 3வது பரிசு | **திரு. கண்ணன்,** மேலப்பாளையம் |
| | **செல்வி. ஜாண்ஸி,** விருதுநகர். |

*பதில் எழுதிய யாவருக்கும் பாராட்டுக்கள்*

## *VBS 2011* ஜெபியுங்கள்

- இந்த ஆண்டு VBS கருத்து **இயேசு போதுமே** இதன் மூலம் 15,000 பிள்ளைகள் இயேசுவை தங்கள் வாழ்வில் போதுமானவராக கண்டு கொள்ள
- VBS பாடல்கள் மூலம் பிள்ளைகள் தேவ பிரசன்னத்தை அனுபவிக்க
- **<u>6 நாட்கள் தலைப்புகள்</u>** 1. உலகத்திற்கு இயேசு போதுமே 2. எனக்கு இயேசு போதுமே 3. என் பணியில் இயேசு போதுமே 4. விடுதலை தரும் இயேசு போதுமே 5. உயிர்த்தெழுந்த இயேசு போதுமே 6. பரலோகம் தரும் இயேசு போதுமே - இந்த தலைப்புகள் மூலம் சொல்லி கொடுக்கப்படும் வசனங்கள், வேதாகம சம்பவங்கள், போதிக்கும் சுவிசேஷம் மூலம் பிள்ளைகள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் இரட்சிக்கப்பட
- VBSக்கு 350க்கும் அதிகமான தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித்தர
- VBSஇன் தேவை ரூ. 7 ½ லட்சம் சந்திக்கப்பட (1 நபருக்கு தேவை ரூ. 50)

### <u>உலக செய்திகள்</u>

- ஒவ்வொரு ஆண்டும் 20 இலட்சம் இந்தியர்களுக்கு காச நோய் வருகிறது
- உலக அளவில் பத்தில் ஒருவருக்கு காச நோய் இருக்கிறது.
- இந்தியாவில் மூன்றில் ஒருவருக்கு காசநோய் இருக்கிறது.
- காசநோய் காற்றில் பரவும் பாக்டீரியா நோய் தொற்று
- காசநோயினால் ஒரு 3 நிமிடத்திற்கு 2 மரணங்கள் உலக அளவில் நிகழ்கிறது.

### *<u>நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு</u>*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம் | | | |
| Grace Ministries | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237757808 |
| Grace Ministries | TMBL0000156 | TMB Ltd., Sipcot Tuticorin | 156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம் | | | |
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம் | | | |
| Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |
| B. Porselvan Asir | TMBL0000156 | TMB Ltd SIP Cot, Tuty. | 156100710400023 |
| B. Porselvan Asir | | ICICI, Tuticorin | 613901505893 |
| B. Porselvan Asir | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237761803 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

மணியார்டர், Cheque, D.D., அனுப்புகிறவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

**B. பொற்செல்வன் ஆசீர், கிருபையின் ஊழியங்கள், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101**



1529 வெள்ளியைப் பார்க்கிலும் புத்திமதியையும் பசும்பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தையும் அங்கீகரித்துக் கொள் (8:10)

1530 ஞானத்தையும் புத்தியையும் நீ சிநேகி; அவை உன்னைச் சிநேகிக்கும் (8:17)

1531 ஞானத்தையும் புத்தியையும் கண்டடைய அதிகாலையிலே அவற்றைத் தேடு (8:17)

1532 நீ புத்தியைக் கேட்டு, ஞானமடை; அதை விட்டு விலகாதிரு (8:33)

1533 ஞானத்தைக் கண்டடை; ஜீவனைக் கண்டடைவாய்; கர்த்தரித்தில் தயவையும் பெறுவாய் (8:35)

1534 ஞானத்திற்கு விரோதமாய் பாவஞ்செய்யாதே; உன் ஆத்துமாவைச் சேதப்படுத்துவாய். ஞானத்தை வெறுக்கிறவன் மரணத்தை விரும்புகிறான் (8:36)

1535 ஞானமுள்ளவனைக் கடிந்து கொள்; அவன் உன்னை நேசிப்பான் (9:8)

1536 ஞானமுள்ளவனுக்குப் போதகம் பண்ணு; அவன் ஞானத்தில் தேறுவான் (9:9)

1537 அகந்தை (proud) வேண்டாம்; அகந்தை வந்தால் இலச்சை (disgrace) வரும்; தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு (11:2)

1538 ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும் ஞானமுள்ளவனாயிரு. (11:30)

1539 ஞானவான்களுடைய போதகத்தைக் கேள்; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம் (13:14)

1540 ஞானிகளோடே சஞ்சரி; ஞானமடைவாய், மூடருக்குத் தோழனாகாதே (13:20)

1541 ஞானத்தில் பிரியங்கொள்; உன் மனதிலுள்ளவைகளை வெளிப்படுத்தப் பிரியப்படாதே (18:2, 29:3)

1542 ஞானத்தை பெற்றுக்கொள்; அவன் தன் ஆத்துமாவைச் சிநேகிக்கிறான் (19:8)

1543 கேட்கிற செவிக்கு ஞானமாய் கடிந்து கொண்டு புத்தி சொல் (25:12)

1544 ஞானமாய் நட; இரட்சிக்கப்படுவாய் (28:26)

1545 நீ உன்னை ஞானியென்று எண்ணாதே (3:7)

1546 அறிவை வெறுக்காதே (1:29)

1547 நீதிமானுக்கு உபதேசம் பண்ணு; அவன் அறிவில் விருத்தியடைவான் (9:9)

1548 அறிவோடு நடந்து கொள்; மூடத்தனத்தை வெளிப்படுத்தாதே (13:16)

1549 அறிவைத் தேடு (15:14)

1550 உன் மனம் அறிவைச் சம்பாதிப்பதாக (18:15)

## *VBS 2011* <u>பயிற்சிகளுக்காய் ஜெபியுங்கள்</u>

VBS பயிற்சி தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர், திண்டுக்கல், திருச்சி, ஈரோடு, திருப்பூர் ஆகிய 7 மாவட்டங்களில் 18 இடங்களில் நடைபெற உள்ளது ஜெபியுங்கள்!

**<u>தூத்துக்குடி மாவட்டம்</u>** 1. தூத்துக்குடி 2. சாயர்புரம் 3. ஸ்ரீவைகுண்டம்

**<u>நெல்லை மாவட்டம்</u>** 4. திருநெல்வேலி 5. அழகப்புரம் 6. ஆலங்குளம், 7. திருவேங்டம் 8. அம்பாசமுத்திரம் 9. வடமலாபுரம்

**<u>விருதுநகர் மாவட்டம்</u>** 10. ஏழாயிரம்பண்ணை 11. சிவகாசி 12. சாத்தூர் 13. விருதுநகர் 14. இராஜபாளையம்

**<u>திருச்சி மாவட்டம்</u>** 15. மஞ்சம்பட்டி **<u>ஈரோடு மாவட்டம்</u>** 16. கொளபலூர்

**<u>திண்டுக்கல் மாவட்டம்</u>** 17. விராலிபட்டி **<u>திருப்பூர் மாவட்டம்</u>** 18. தொட்டிப்பாளையம்

# எல்லாவற்றையும்

Dr. P. செல்வராஜ், மதுரை

1. பிலிப்பியர் 3:8 ''....என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்கு எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்'
2. பிலிப்பியர் 3:21 ''அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்''
3. பிலிப்பியர் 4:13 ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு''

பவுலடிகளார் கிறிஸ்துவை 'கர்த்தராகிய கிறிஸ்து' என்று குறிப்பிடாமல் என் கர்த்தராகிய கிறிஸ்து என்று குறிப்பிடுவதிலிருந்து நாம் அதிகமாகக் கற்றுக் கொள்ள வேண்டிய சத்தியம் என். இந்தக் கேள்வியை வாசித்து முடிக்குமுன் 'இயேசு நம் ஒவ்வொருவருடைய ஒவ்வொருவருக்கும் சொந்த இரட்சகர்' என்று உங்கள் உள்ளம் கூறுவதை என்னால் உணரமுடிகிறது. இத்தகைய சொற்றொடைய அறிக்கை பொதுவாக விசுவாசிகள், (Believers) கிறிஸ்து + அவர்கள் (கிறிஸ்தவர்கள்) எனும் அடையாளத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் குறிப்பீடான விசுவாசிகள், அனைவரைப் பொறுத்தமட்டில் அறியப்பட்ட ஒன்று. 'பிற விசுவாசிகளின் பலருக்கு நான் என், எனது, எனக்கு' போன்ற தமிழ்ச் சொற்களின் பொருள் அடிப்படையிலான கேள்விக்குறி இருக்கிறது என்பதை நான் கண்டிருக்கிறேன். ஒருவேளை 'நம், நாம், நமது, நமக்கு' போன்ற பன்மைச் சொற்களைப் பயன்படுத்துவது அவர்களுடைய ஐயப்பாட்டினை நீக்கக் கூடும். பவுல் குறிப்பிட்டதைப்போல 'நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நாம் நஷ்டமென்று எண்ணுகிறோமா?' என்ற தியானக் கருத்தை நாம் பறைசாற்றுவது 'எல்லா' விசுவாசிகளுக்கும் பயனளிக்கும் என்று நான் நினைக்கிறேன். இவ்வாறு திருவசனங்களைச் சொற்றொடர் மாற்றம் செய்யும் குறிப்புகள் நமக்கு உதவியாக இருக்கும். (Paraphrase) இதற்கு 'திருவசன ஜெபங்கள்' (Scripture Prayer) ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இரண்டாவதாக, பவுலடிகளார் எது உண்மையிலேயே மேன்மையானது என்று வெளிப்படுத்துகிறார். 'கிறிஸ்து இயேசுவை அறிகிறஅறிவை' அவர் மேன்மை என்று குறிப்பிடுவதைத் திருவசனத்தில் நாம் தெளிவாகக் காணமுடிகிறது. ஆங்கிலப்பதிப்பில் 'Excellency' என்ற சொல் பயனப்படுத்தப்பட்டிருப்பதை கவனியுங்கள். ஒரு கையடக்கமான ஆங்கில சொல்லகராதியிலே இச்சொல்லின் பொருளாக Verygood, first rate, first class, high-Quality. great, fine, superior, superd, outstanding, marvellius, splendid, brilliant, supreme, superlative..... போன்ற சொற்கள் தரப்பட்டிருப்பதைக் பார்க்கிறோம். 'Supreme' எனும் பொருள் – சொல் சரியான



பணித்தளம் – **அத்தியூத்து** – சகோதரிகள் மாலா, பாப்பா ஆஸ்த்துமா வியாதியிலிருந்து விடுதலை கிடைக்க, சகோதரி பலவேசம் இருதய பலவீனம் மாற, சகோதரி பட்டம்மாள் நெஞ்சுவலியிலிருந்து விடுதலை கிடைக்க... சகோ. அந்தோணி முத்துவிற்கு பரிபூரண சுகம் கிடைக்க... சகோதரி. ராமலெட்சுமி தொண்டையில் நீர்க்கட்டி சுகமாக ஜெபிப்போம்

பணித்தளம் – **வடமலாபுரம்** – சகோதரி. பவானி விபத்தில் தலையில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கும் அவர் குணமடைய ஜெபிப்போம். சகோ. கோஸ் மகள் வலிப்பு மற்றும் நரம்பு தளர்ச்சி தேவன் பூரண சுகம் அருள ஜெபிப்போம்.

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் – **தொட்டம்பட்டி**

சகோ. பெரியண்ணா, சகோதரி. காமாட்சி ஆகியோருக்கு இருக்கும் கால்வலி பிரச்சனைகள் மாற முழுமனதோடு கர்த்தரைத் தேட ஜெபிப்போம்.

**ஏப்ரல் 29 வெள்ளி**

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் – **மஞ்சம்பட்டி** – சகோதரி. சம்பூரணம் அவர்களுக்கு காணப்படும் அல்சர் வியாதியில் பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம். சகோதரி. ஜெயராணிக்கு தூக்கம் இல்லாமை மற்றும் மனப்போராட்டம் வியாதியிலிருந்து பூரண சுகம் கிடைக்க, மணப்பட்டி சகோதரி. மகாலட்சுமி கை, கால் வீக்கம் சுகம் கிடைக்க.... சகோதரி கிரேஸலிக்கு ஆஸ்த்துமா வியாதியில் விடுதலை கிடைக்க ஜெபிப்போம்.

*திருமணத்திற்காக ஜெபிப்போம்.*

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் – **பேட்மாநகரம்** – சகோதரி காசியம்மாள் திருமணம் நடைபெற...

பணித்தளம் – **ஸ்ரீமூலக்கரை – திருப்புளியங்குடி** – சகோதரி. தேவி, மாலதி இவர்களின் திருமணத்திற்காக....

பணித்தளம் – **திருக்களூர் –** சகோதரி. வாசமுத்து திருமணத்திற்காக.... சகோதரி. முத்துலட்சுமியின் திருமணத்திற்காக....

**ஏப்ரல் 30 சனி**

**தூத்துக்குடி ரூரல்** – சகோ. ரத்தினம் பால், பாரின்கமல், செல்வி, மேரிவசந்தி, லதா, அருண்குமார் இவர்களின் திருமணத்திற்காக

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் – **பண்டுதன்பட்டி – தெற்குளம்பட்டி** – சகோதரி. சுப்புலட்சுமி, பண்டுதன்பட்டி, சகோதரி. அன்னலட்சுமி இவர்களின் திருமணத்திற்காக...

பணித்தளம் – **ஜமீன்சல்வார்பட்டி – பூச்சக்காபட்டி** – கிராமத்தில் கோமதி என்ற சகோதரியின் திருமணத்திற்காக

**ஏழாயிரம்பண்ணை காலனி** – சகோதரி. பூங்கோதைக்கு திருமணம் நடைபெற...

பணித்தளம் – **அழகப்பபுரம்** – சகோதரி. அம்பிகாவுக்கு கர்த்தர் திருமணம் நடைபெற...

பணித்தளம் – **திருவேங்கடம்** – சகோதரி. சந்தனத்திற்கு திருமண தடை நீங்க

பணித்தளம் – **மைப்பாறை** – சகோ. ஆல்பட்டு திருமணம் நடக்க சகோ. துரைராஜ் மகள் எஸ்தர்க்கு திருமணம் நடக்க...

பணித்தளம் – **பொங்கலூர்** – சகோதரி. விஜயாவுக்கு திருமணம் நடைபெற ஜெபிப்போம்

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்1 – மங்கையர்க்கரசி** என்ற தாயாரின் கண்ணில் காணப்படும் பெலவீனம் நீங்க...

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்** – திருமதி. அன்னபுஸ்பம் அவர்களுக்கு சரீரத்தில் பூரண சுகம் கிடைக்க... பஞ்சவர்ணம் என்ற தாயாருக்கு இழுப்பு வியாதியிலிருந்து பூரண சுகம் கிடைக்க... கோமதி என்ற தாயாருக்கு நன்றாக தூக்கம் வர... முகேஷ் (3 வயது) வாய் பேசவில்லை தேவன் அற்புதம் செய்ய... சதீஷ்குமார் (வயது 8) சரியாக வாய் பேச முடியாது தேவன் சுகமாக்க...

பணித்தளம் : **பண்ணைவிளை – சாயர்புரம்** – உஷா என்ற தங்கைக்கு வியாதியிலிருந்து விடுதலை கிடைக்க...

**ஏப்ரல் 26** **செவ்வாய்**

**விருதுநகர்மாவட்டம்**

பணித்தளம் : **அய்யனேரி – இ.காலனி** – சகோதரி காளியம்மாளுக்கு தொண்டையில் உள்ள பெலவீனம் மறைய....

பணித்தளம் : **பண்டுதன்பட்டி –** சகோ. தங்கபாண்டிக்கு 5 ஆண்டுகளாக இருக்கும் கேன்சர் வியாதியிலிருந்து தேவன் அற்புதம் செய்ய....

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்** – கோதை என்ற ரூத் அவர்களின் சரீரத்தில் காணப்படும் பெலவீனத்திலிருந்து தேவன் சுகம் தர

**கிருஷ்ணாபுரம்** – சகோதரி கருபாயி, முருகலெட்சுமி சரீரத்தில் காணப்படுகிற பெலவீனங்கள் மாற....

பணித்தளம் – **செந்நெல்குளம்** – சுந்தர்ராஜ் (14 வயது) சிறுவனுக்கு நல்ல பார்வையை தேவன் கொடுக்க.... இதய நோயிலிருந்து பாதிக்கப்பட்டிருக்கும் வீரராஜ் (12 வயது), சின்னதுரை (17 வயது) இவர்களுக்கு தேவன் அற்புதம் செய்ய

**ஏப்ரல் 27** **புதன்**

**புது செந்நெல்குளம்** – போஸ்ட்மாஸ்டர் அம்மாவுக்கு காணப்படும் வியாதிலியிருந்து சுகம் கிடைக்க.... **சிந்தட்டிகாளை** என்கிற தகப்பனாருக்கு காலில் காணப்படும் பெலவீனம் மாற... சகோ. சேவியர் சிறுநீரகம் செயல்பட....

பணித்தளம் – **ஏழாயிரம்பண்ணை** – சகோதரி அமலாபுஷ்பம் இதய வால்வு பெலவீனம் ஆப்ரேஷன் இல்லாமல் கர்த்தர் சுகம் கொடுக்க... மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள சிவகாமி நாதன் என்பவருக்கு தேவன் அற்புத சுகம் கொடுக்க... சகோதரி. பத்திரம்மாள் குடும்பத்தில் உள்ள வியாதிகள் மறைய... சுந்தரவேல் (9 வயது) வாய் பேச முடியாத இவனுக்கு தேவனுக்கு அற்புதம் செய்ய....

**ஏப்ரல் 28** **வியாழன்**

**நெல்லை மாவட்டம்**

பணித்தளம் – **அழகப்பபுரம்** – சகோ. பி. ஆறுமுகம் விபத்தில் வாயில் 4 பற்கள் உதிர்ந்து விட்டது. தேவன் அவருக்கு நல்ல சுகம் கிடைக்க ஜெபிப்போம். சகோ. ஜாண் ஹென்றி அவர்களுக்கு வாதத்திலிருந்து சுகம் பெற

பணித்தளம் – **திருவேங்கடம்** – சகோதரி. செல்லம்மாளுக்கு முழங்காலிலுள்ள பலவீனம் மாற ஜெபிப்போம். சகோதரி. பிச்சைக்கு காணப்படுகிற முதுகுவலி, ஆஸ்த்துமா வியாதி நீங்க ஜெபிப்போம்.



முறையில், ஓரளவிற்கும், 'மேன்மை' எனும் திறவுகோல் சொல்லிற்குப் பொருத்தமானது என்று கருதுகிறேன். மாத்யூ ஹென்றி தன்னுடைய வேதாகம விளக்க உரையில் (commentary) கிறிஸ்துவின் ஆள்த்தத்தவத்திலும் அவர் அருளும் இரட்சிப்பிலும் விசுவாசம் கொள்வதையே 'கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவு' என்று கூறுகிறார். இந்த அறிவு பவுலடிகளார் தன்னுடைய இதயத்தில் கிறிஸ்து இருக்கும் இடத்தை 'முற்றுகை' செய்ய நினைக்கும் உலக மகிழ்ச்சிகள் வெளிப்படையான சிலாக்கியங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் மேன்மையானது என்று அறிக்கையிடுவதை விளக்க உரை குறிப்பிடுகிறது. பரிசேயனாக இருக்கும் போது பவுலடிகளாருக்கு எது மேன்மையாக, இலாபமாக இருந்ததோ அது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபிறகு அவருக்கு இழப்பாக, நஷ்டமாக மாறிவிட்டது. நம்முடைய இதயத்தில் கிறிஸ்து இருக்கும் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடிய காரியங்களைப் பொறுத்தவரையில் நாம் எந்த அளவிற்கு விழிப்புடன் இருந்து செயல்படுகிறோம்? பிலிப்பியர் 3:5முதல் 7-ஐ வாசித்தால் பிலிப்பியர் 3:8ல் 'லாபமானவைகள்' என்று பவுலடிகளார் எவற்றைக் குறிப்பிடுகிறார் என்பதை நாம் தெளிவுரக் காணமுடியும். அவை, விருத்தசேதனம், வம்சம், கோத்திரம், பரிசேயம், பக்திவைராக்கியம், நீதி என்று பார்க்கிறோம். 'நீதி' என்று சொல்லாமல் 'நியாயப்பிரமாணத்தின்படி நீதி' என்றும் 'பக்தி' என்று சொல்லாமல் 'பக்தி வைராக்கியம்' என்றும் சொல்வதைப் பார்த்தோமானால் 'மதத்தை' அவர் கோடிட்டுக் காட்டுவது நமக்குப் புரிகிறது. பரிசேயம் 'தேவனால் உண்டாயிருக்கிற... நீதி(யைதி)' தராது என்று பவுலடிகளார் அனுபவப் பூர்வமாக அறிந்து கொண்டார் (பிலிப்பியர் 3:9). நம் ஒவ்வொருவருக்கும் 'மத அடிப்படையிலான நீதியல்ல' கிறிஸ்துவை அறிவதால் கிட்டும் 'தேவனுடைய நீதி' அவசியமென்று பவுலடிகளாரின் எழுத்துக்கள் நமக்கு ஆலோசனை தருகிறது.

இதுவரை நம்முடைய இதயத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு முதலிடம் தரப்படுவது இன்றியமையாதது என்று பார்த்தோம். நமக்கு மேன்மையானது கிறிஸ்துவை அறியும் அறிவு என்பதையும் கண்டோம் (பிலிப்பியர் 3:8). சவுல் பவுலாக மனமாற்றம் அடைந்தபிறகு அவருக்கு மேன்மையாக இருந்தவைகள் அனைத்தும் மேன்மையற்றவை ஆகிவிட்டன. மேன்மையற்றவை என்று கூறுவதைவிட இழப்புகள் என்று பவுலடிகளார் பயன்படுத்திய சொல்லினின்று அறிந்து கொள்கிறோம்.

இப்பொழுது பிலிப்பியர் 3:21-ஐ நாம் தியானிப்போம். தூயோருக்கென்று ஒரு மகிமை வைக்கப்பட்டிருக்கிறது. இறந்தோர் உயிர்த்தெழுவதை மட்டும் அது குறிப்பிடவில்லை. இந்த தூயோர்தம் உயிர்த்தெழுதலை 'மாபெரும் நன்மை' என்று மாத்யூ ஹென்றி தன்னுடைய விளக்கவுரையில் அழுத்தமாகக் கூறுகிறார். இந்த மாற்றத்தின் பின்னணியில் இருக்கும் கிறிஸ்துவின் வல்லமையைப் பற்றி இவ்வசனத்தில் வாசிக்கிறோம். அந்த வல்லமையானது கிறிஸ்துவானவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தும் அவர்தம் வல்லமையாகும். இவ்வாறிருக்க தேவனுடைய பிள்ளைகளுக்கு மரணத்தைக் குறித்த அச்சம் இருக்காதே, இருக்கலாகாதே!

இந்த வசனம் குறிப்பிடுகிற மகிமைக்குப் பதிலாக பலர் வேறொரு மகிமையை நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிழைப்பிற்காகக் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்களாகி விடுகிறார்கள். அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சை. ஏனெனில், அவர்கள் உலகத்திற்கடுத்தவைகளை அல்லவா சிந்தித்து வாழ்கிறார்கள்? (பிலிப்பியர் 3:18-19). ஆங்கில மொழிபெயர்ப்பில் இலச்சை என்ற சொல் அதாவது வெட்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெட்கமான மகிமை, மகிமையே அல்ல, அல்லவா? உலகத்திற்குரியவைகளேயே சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருப்போர் ஏன் அவ்வண்ணம் இருக்கிறார்கள்? காரணம், அவர்களுக்கு அழிவற்ற நன்மையைக் குறித்த எதிர்பார்ப்பு இல்லை, நம்பிக்கை இல்லை. ஆனால் மறுரூபப்படுத்தும் மகிமைக்கு உரியோர் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஆவலோடு எதிர்பார்ப்பவர்கள். அவர்கள் உலக இழப்புகளைப் பெரிதாகக் கருதமாட்டார்கள். நமக்கு அழிவுள்ள உடலுக்குப் பதிலாக நிலையான உடலைத்தர இயேசுகிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். அந்த அழிவற்ற உடல் எப்படியிருக்கும், இயேசுகிறிஸ்துவின் மகிமையான உடல்போன்றிருக்கும் என்பது எத்தனை மகிழ்ச்சி தர வேண்டிய செய்தி! எனவே கிறிஸ்துவில் தூயோருக்கு இரண்டாம் வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு தேவை, ஆயத்தமும் தேவை.

இச்செய்தியில் அடிக்கோடிடப்படும் மகிமை ஒரு இரகசியத்திலுள்ளது அதாவது மறைபொருளில் உள்ளது, என்று தூய விவிலியம் குறிப்பிடுகிறது. அந்த வேத பகுதியை நாம் முழுமையாக வாசித்தால் அந்த இரகசியம் கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருப்பது என்றும் அறிகிறோம். இரண்டையும் இணைத்துப் பார்த்தால் தேவனுடைய வார்த்தை கிறிஸ்துவானவரே மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருப்பதை வெளிப்படுத்துகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த வெளிப்பாட்டைப் பெற்ற அப்போஸ்தலர் யோவான் தன்னுடைய நற்செய்தி நூலின் முதல் இரண்டு வசனங்களில் இயேசு கிறிஸ்துவுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் உள்ள ஒன்றிப்பை எடுத்துக் காட்டுகிறார். (கொலோ. 1:27; யோவான் 1:1-2)

இந்த இரகசியத்தைப் பவுலடிகளார் தேவபக்திக்குரிய இரகசியம் என்னும் குறிப்பிடுகிறார் (1தீமோத்தேயு 3:16). மகிமையில் ஏறெடுத்துக் கொள்ளப்பட்ட மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கிறது இவ்வசனம். இன்னொரு திருவசனத்தில் ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாக மகிமையின் மேல் மகிமையடைந்து நாம் மறுரூபப்படும் சத்தியத்தைப் பறைசாற்றுகிறது (2கொரிந்தியர் 3:18). இயேசு கிறிஸ்துவைக் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூறுகிறவர்கள், அவரை விசுவாசிக்கிறவர்கள் ஆத்தும ரட்சிப்பை மகிமைநிறை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொள்கிறார்கள் (1பேதுரு 1:8)

இந்த மகிமையை ஏற்கெனவே பெற்றிருந்த முதல் ஆதாம் தன்னுடைய மீறுதலினாலே அதை இழந்துவிட்டான். அதை மீண்டும் நமக்கு பெற்றுத்தரவே



ஆசீர்வதிக்கப்பட, இதனை பொறுப்பாய் நடத்துகிற சகோ. ஜெயபால் அவர்களின் குடும்பம் இவரது 3 பிள்ளைகளின் படிப்பு தேவனால் ஆசீர்வதிக்கப்பட

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **சாத்தூர் ரூரல் – ஸ்ரீரெங்காபுரம்** – சகோதரி ராஜேஸ்வரி குடும்பத்தில் தொழில் ஆசீர்வதிக்கப்பட...

**சிப்பிப்பாறை** – சகோ. ராஜாராம் 6 வருடங்களாக பெற்றோரை பார்க்க வரமால் இருக்கிறார். இந்த சகோதரன் பெற்றோரை நேசித்து அவர்களை பார்க்க வரும்படி...

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்** – இங்கு ஜெபத்திற்கு புதிய ஆத்துமாக்கள் கலந்து கொள்ள.... **வெள்ளையாபுரம், தூங்காரெட்டிபட்டி, செல்லையாபுரம், அப்பனம் பட்டி** ஆகிய இடங்களில் நடைபெறுகிற சிறுவர் ஊழியத்திற்காக...

பணித்தளம் : **முக்கூட்டுமலை** – சகோ. டேனியல் அவர்களுக்கு வேலை ஸ்தலத்திலே காணப்படும் பிரச்சனைகள் மாற... சகோ. தங்கம் வெளிநாடு போக வழிகள் திறக்கப்பட....

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி** – இந்த கிராமத்தில் உள்ள நமது ஆலயத்தில் ஜன்னல்கள் போடவும், காம்பவுண்ட் சுவர் கட்டவும், ஃபேன் போடவும் தேவைகள் சந்திக்கப்பட...

**ஏப்ரல் 24** **ஞாயிறு**

இங்கு ஆலயத்திற்கு புதிதாய் ஆராதனைக்கு வருகிறவர்கள் ஞானஸ்நானத்திற்கு தங்களை அர்ப்பணிக்க...

**சிவகாசி** – முத்துசாமிபுரம் கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க...

**கன்னித்தேவன்பட்டி, முத்துசாமிபுரம்** இங்கு நடைபெறும் ஞாயிறு ஆராதனையில் புதிய குடும்பங்கள் கடந்து வர...

**புதூர், செல்லநாயக்கன்பட்டி காலனி** – ஆகிய இடங்களில் சிறுவர் ஊழியம் ஆசீர்வதிக்கப்பட திறந்த வாசல் உண்டாக....

**பாரதிநகர்** – சகோதரி. லில்லி புஷ்பம் அவர்களுக்கு சொந்த வீடு கட்ட தேவைகள் சந்திக்கப்பட.... அவர்கள் மகனுக்கு கல்வி உதவித் தொகை கிடைக்க... சகோதரி. சந்திரா அவர்களின் இடம் நல்ல விலைக்கு விற்கப்பட...

**ஏழாயிரம்பண்ணை** – சகோ. ரவிஸ்டீபன் செய்யும் தொழில் ஆசீர்வதிக்கப்பட...

**தேவனுடைய கூடாரத்தில்** நடக்கிற எல்லா ஜெபக்கூடுகைகளிலும் அநேகர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

*வியாதியஸ்தர்களுக்காய் ஜெபிப்போம்*

**ஏப்ரல் 25** **திங்கள்**

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **பேட்மாநகரம் – மீனாட்சி பெட்டியைச்** சேர்ந்த சகோ. தர்மராஜ் அவர்களின் காலில் அநேக வருஷங்களாக ஆறாமல் இருக்கும் புண் ஆற... சகோதரி. மேரி அவர்களுக்கு சுகர் வியாதியிலிருந்து சுகம் கிடைக்க...

**பேரூர்** – பேச்சித்தாய் அவர்களுக்கு வயிற்றுப்பகுதியில் காணப்படும் கேன்சர் வியாதியிலிருந்து தேவன் சுகம் கிடைக்க... சகோதரி. முத்துசெல்விக்கு அல்சர் வியாதியிலிருந்து சுகம் கிடைக்க.... சகோதரி. சிவாவுக்கு சரீர பெலவீனத்திலிருந்து அற்புத சுகம் தேவன் கொடுக்க...

கிடைக்க ஜெபிப்போம்.

பணித்தளம் – **திரளி** – இங்கு சீக்கிரம் ஆலயம் கட்டி முடிக்க பண தேவை, பொருட்கள் தேவையை தேவன் சந்திக்க ஜெபிப்போம்.

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **விராலிப்பட்டி** – சகோ. கோபிநாத் அவருக்கு நல்ல கம்பெனியில் வேலை கிடைப்பதற்காக ஜெபிப்போம் சிறுவர், வாலிபர் நடுவில் நடைபெறுகிற கூடுகைகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

**ஏப்ரல் 21 வியாழன்**

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி** – தோகமலை சகோ. குணசீலம் ஆசிரியர் அவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதான சம்பளம் கிடைக்க ஜெபிப்போம். மணப்பாறை சகோதரி ஹேமலதாக்கு ஆசிரியர் வேலை கிடைக்க ஜெபிப்போம். மலையடிப்பட்டி சகோ. மார்ட்டின் அவர்களுக்கு சொந்தவீடு கட்டப்பட ஜெபிப்போம். தோப்புபட்டி ஆலயம் கட்ட ரூ. 3,00,000 தேவை சந்திக்கப்பட பாரத்துடன் ஜெபிப்போம். சகோ. சேசு அவர்களுடைய வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட்டு கடன் பிரச்சனை நீங்க தேவனைத் துதிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **ஊத்துக்குளி** – சகோ. ஜெபராஜ் அவர்களுக்கு அரசு வேலை கிடைக்க ஜெபிப்போம். ஊத்துக்குளி பகுதியில் ஆராதனை நடத்த சொந்தமாக இடம் வாங்க, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். சகோ. ஏசுதாஸ் அவர்கள் வேலைக்கு தடையின்றி செல்ல, அவர்கள் மகன்களின் கல்லூரிப் படிப்பின் தேவை சந்திக்கப்பட ஜெபிப்போம்.

பணித்தளம் : **பொங்கலூர்** – காட்டூர் புதூர், சின்னக் காட்டூர் பகுதியில் தேவன் திறந்த வாசல் தர ஜெபிப்போம்.

பணித்தளம் : **பேட்மாநகரம்** – சுந்தரலிங்கநகர் இங்கு ஜெபக்கூடுகை நடத்த ஒரு வீடு கிடைக்க... ஸ்ரீவைகுண்டம் – இங்கு ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை நடைபெறுகிற உபவாச ஜெபத்தில் அநேகர் கலந்து கொள்ள...

**ஏப்ரல் 22 வெள்ளி**

பணித்தளம் : **தாதன்குளம்** – கருங்குளம் பகுதியில் வாலிபர்கள் மத்தியில் நடைபெறும் ஜெபக்கூடுகையில் அநேக வாலிபர்கள் கலந்து கொள்ள...

**ஸ்ரீமூலக்கரை** பணித்தளத்தில் புதிய ஆத்துமாக்கள் சந்திக்கப்பட...

பணித்தளம் : **திருக்களூர்** – தேவாங்குளம் என்ற இடத்தில் புதிதாய் ஆராதனை தொடங்க தேவன் வழிகளை திறந்து தரும்படியாய்...

**தூத்துக்குடி ரூரல்** – சகோதரி. பிரியாவின் S.S.L.C. Certificate, T.C. கல்லூரியில் இருந்து கிடைக்க...

பணித்தளம் : **பண்ணைவிளை – செபத்தையாபுரம்** – இங்கு நடக்கிற ஜெபக்குழுவில் கலந்து கொள்ளுகிறவர்கள் தடையில்லாமல் கலந்து கொள்ள, இந்தக் கூடுகை ஆசீர்வதிக்கப்பட.... இந்த பணித்தளத்தில் ஊழியத்தை தாங்குகிற ஜெபிக்கிற குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்க...

**ஏப்ரல் 23 சனி**

**சுப்பிரமணியபுரம் – J.P. Home**-ல் தங்கியிருக்கிற பிள்ளைகளின் எதிர்காலம்



கடைசி ஆதாம் இவ்வுலகிற்கு வந்து, ஊழியம் செய்து, மகிமையடைந்தார். அந்த மகிமை தேவனுக்குரியது (வெளிப்படுத்தல் 4:11). தேவன் மனிதனை ஏற்கனவே மகிமையினால் முடிசூட்டியிருக்கிறார் (சங்கீதம் 8:5). ஆனால், மனிதனோ தன்னுடைய மாற்றிவிட்டான் (எரேமியா 2:11) இந்த நிலையை சீர் செய்யவே இறைமைந்தன் இவ்வுலகிற்கு வந்தார். மகிமையைப் பற்றிய வெளிப்பாட்டைப் பெற்றவர்கள் அவரை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் அந்த வெளிப்பாட்டைப் பெறத் தடையாக இருப்பது என்ன? எவை?

## பரிசுத்த உபவாச ஜெபம்

இடம் : **புதுவாழ்வு மையம் அனுப்பங்குளம், விருதுநகர் மாவட்டம்**
(சிவகாசி சாத்தூர் மெயின்ரோட்டில் 8வது கி.மீயில் உள்ளது)

காலம் : **2011 ஏப்ரல் 28,29,30 (வியாழன், வெள்ளி, சனி)**
**ஆயத்தக்கூட்டம் 27-4-2011 புதன் இரவு 8 மணி**
**முகாம் வியாழன் 28ம் தேதி காலை 5 மணி முதல் 30ம் தேதி சனி மதியம் 1 மணிக்கு முடிவடையும்.**

**முகாமின் பதிவு கட்டணம் ரூ. 50/– மட்டும். முந்தின நாள் இரவே வந்து தங்கலாம்.**
**ஆண், பெண் தங்க தனித்தனி இடவசதி உண்டு.**

**தொடர்பு : 98431-48463, 98947 14768**

## *ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்*

## MECOGEN - VBS 2011

கடந்த 1997 முதல் ஆலயமில்லா கிராமங்களில் சிறுவர்களை இயேசுவிற்காய் சந்திக்க VBSகளை நடத்த கிருபை செய்து வருகிறார்.

இந்த ஆண்டு 250 கிராமங்களில் VBS நடத்தி 15000 சிறுவர் சிறுமியரை கிறிஸ்துவுக்காய் சந்திக்க ஜெபத்துடன் திட்டமிட்டுள்ளோம்.

இந்த VBS மூலம் சந்திக்கப்படும் ஒரு பிள்ளைக்கு இயேசுவை பற்றி 6 நாட்கள் சொல்லி புத்தகம், பேட்ஜ், இனிப்பு, பரிசு, சான்றிதழ் ஆகியன கொடுப்போம். அதற்கு ஒரு பிள்ளைக்கு ஆகும் செலவு ரூ. 50 மட்டும். நீங்கள் ஜெபத்துடன் எத்தனை பிள்ளைகளை தாங்க வேண்டுமானாலும் தாங்க முன் வாருங்கள் என அன்புடன் அழைக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஒரு VBS முழு செலவை தாங்க ரூ. 2500 காணிக்கையாக அனுப்பி தாங்க முன் வாருங்கள். எந்த கிராமத்தில் VBS உங்கள் காணிக்கை மூலம் நடத்தப்படுகிறது. என்பதை நாங்கள் உங்களுக்கு ஜெபிக்க முன்னதாக அறிவிப்போம்.

விபரங்களுக்கு : **ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்,**
ஆபிரகாம்நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி–628 101.
போன். 94432-89026

# *Valentine Day*

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**

வேலன்டைன் என்பவர் ரோம் நகரிலிருந்து 96 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள Interamna என்று அழைக்கப்பட்டதும் தற்போது Terni என்று அழைக்கப்படுகிறதுமான பட்டணத்தில் வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலத்தில் ரோம பேரரசை Cladius II அல்லது Cladius Gothicus என்று அழைக்கப்பட்ட பேரரசர் ஆண்டு வந்தார்.

இவர் காலத்தில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கவும், ரோம தேவதைகளுக்கு வணக்கம் செலுத்தவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இவர்போல் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தின பேரரசர்கள் ரோம பேரரசில் அநேகர் உண்டு. அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் கி.பி. 34 முதல் கி.பி. 67 முடிய உள்ள திருச்சபை வரலாற்றை அதன் உபத்திரவங்களோடு விளக்குகிறது.

கி.பி. 67 முதல் கி.பி. 100 வரை உள்ள கால கட்டத்தில் நீரோ (Nero) பேரரசர் தொடங்கி டிரோஜன் (Trojan) பேரரசர் வரை ஆண்டனர். அவர்கள் காலத்தில்தான் பவுல், பேதுரு, யோவான் மற்றும் அநேக சீஷர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டு யோவான், தோமா (இந்தியாவில் மரித்தார்) தவிர மற்ற யாவரும் இரத்த சாட்சிகளாய் மரித்தனர்.

கி.பி. 100 முதல் கி.பி. 313 வரைக்கும் உள்ள கால கட்டத்தில் ரோம பேரரசர்களால் திருச்சபை கடந்து சென்ற உபத்திரவம் சொல்லொண்ணா துயரமாகும். இக்காலத்தில் டிரோஜன் (கி.பி. 98 – கி.பி. 117) ஆதிரியான் (Harchan) (கி.பி. 117 – 138) அன்டோனிஸஸ்பயஸ் (Antoninus Pious) (கி.பி. 138 – 161) மாற்கு அரீலியு (Marcus Autalius) (கி.பி. 161 – 180) கமோடோஸ் (Commodus) செப்பற்றிமு செவீரு (Septimus Severus) டியோகிளிஷன் கிளாடியஸ் ஜுலியஸ் சீஸர் போன்ற பேரரசர்கள் ஆண்டனர். இவர்கள் காலத்தில் கிறிஸ்தவர்கள் அடைந்த உபத்திரவம் பெரியது. இப்படிப்பட்ட பேரரசர்களில் ஒருவர் கிளாடியஸ் கோத்திகஸ்.

இவர் ஆட்சிகாலத்தில் வேலன்டைன் கிறிஸ்துவுக்கு உத்தம சாட்சியாய் வாழ்ந்து வந்தார். இவரோடு மேரினோ என்பவரும் இணைந்து உபத்திரவப்படுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர். மேலும் பேரரசர் Claudius II தனது போர்ச்சேவகர்கள் திருமணம் செய்யாது இருந்தால் தான் தீவிரமாக போரிடுவர் என்றும் போர்வீரர் எண்ணிக்கை குறையாது இருக்க அவர்கள் திருமணம் செய்யாது இருந்தால் தான் முடியும் என எண்ணி போர்வீரர்கள் திருமணம் செய்யாது இருக்கவேண்டும். ஆனால் வேண்டுமானால் திருமணம் செய்யாது ஒரு பெண்ணோடு வாழலாம் என சுயநல நோக்கோடு சட்டமிட்டார். இதனை வேலன்டைன் எதிர்த்து முறையாக திருமணம் செய்து தான் வாழ வேண்டும் என சில போர்ச்சேவகர்களுக்கு அவர் திருமணம் செய்து வைத்தார்.



பாக்கியம் அருள... சகோ. நடராஜக்கனி – பூபதி இவர்களுக்கு கர்த்தர் கர்ப்பத்தின் கனி கொடுக்க...

*சுகப்பிரசவத்திற்காக ஜெபிப்போம்*

பணித்தளம் – **தாளமுத்துநகர்** – சகோதரி. அமுதாவிற்கு சுகபிரசவம் உண்டாக...

பணித்தளம் – **சிவகாசி** – திரு. ஈசாக்கு அவர்களின் மகள் மற்றும் திரு. அந்தோணி அவர்களின் மனைவி இவர்களுக்கு சுகபிரசவம் கொடுக்க... கர்ப்பத்தின் கனி ஆசீர்வதிக்கப்பட...

பணித்தளம் : **செந்நெல்குளம்** – சுந்தரி என்ற சகோதரிக்கு கர்த்தர் சுகபிரசவம் கட்டளையிட

*கடன்பிரச்சனையிலிருந்து விடுதலை உண்டாக ஜெபிப்போம்*

**ஏப்ரல் 18 திங்கள்**

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி – பூச்சக்காபட்டி** என்ற கிராமத்தில் சாந்தி, மருதவல்லி இவர்களுக்கு காணப்படுகிற கடனிலிருந்து விடுதலை உண்டாக....

பணித்தளம் : **சிவகாசி** – கோபால்நகர் – சகோதரி. சரஸ்வதி அவர்களுடைய கடன் பிரச்சனைகள் மாற...

**நல்ல வேலைக்காக ஜெபிப்போம்**

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்** – சகோதரி. சாந்தி கணவருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க.. சகோதரி. சர்மிளா எழுதி இருக்கிற அரசாங்கத் தேர்வில் வெற்றி பெற்று வேலை கிடைக்க... சகோ. ரத்தினபால் அவர்களுக்கு வேலை கிடைக்க....

பணித்தளம் : **பண்ணைவிளை – கண்ணாண்டிவிளை** – ஜெயராணி, கவிதா இவர்களுக்கு ஆசீர்வாதமான வேலை கிடைக்க....

**ஏப்ரல் 19 செவ்வாய்**

சிவகாசி ரிசர்வ் லயன் – சகோதரி பொற்கொடி அவர்களுக்கு அரசாங்க வேலைக்கான ஆர்டர் தடையின்றி கிடைக்க....

**கோபால்நகர்** – சகோதரி. சரஸ்வதியின் கணவருக்கு வேலை கிடைக்க.... சகோ. ஆனந், முத்து பிரின்ஸ், பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு அரசு வேலை லஞ்சம் கொடுக்காமல் கிடைக்க... **ஏழாயிரம்பண்ணை கீழுர்** – ஜெயபிரியாவுக்கு படிப்பிற்கேற்ற நல்ல வேலை கிடைக்க... சகோ. டேவிட்ராஜாவுக்கு அரசாங்க வேலை கிடைக்க...

*பொதுவான ஜெபக்குறிப்புகள்*

பணித்தளம் : **அழகப்பபுரம்** சகோதரி. ஜீவரேகாவுக்கு V.A.O. வேலை கிடைக்க ஜெபிப்போம். சகோ. ஜெபராஜ் அவர்கள் வியாபாரம் விருத்தியடைய ஜெபிப்போம்.

பணித்தளம் : **திருவேங்கடம்** – சகோ. சாலோமோனுக்கு V.A.O. பணி கிடைக்க, வீட்டை புதுப்பிக்க தேவை சந்திக்கப்பட ஜெபிப்போம். சகோ. பெரியசாமி வீட்டிலுள்ள கடன் பிரச்சனை மாற ஜெபிப்போம்.

**ஏப்ரல் 20 புதன்**

பணித்தளம் : **அத்தியூத்து** – சகோ. பாக்கியசாமி வாங்கிய 1½ லட்சம் திரும்ப சகோ. ஜேம்ஸுக்கு கொடுக்க...

பணித்தளம் : **மைப்பாறை** – சகோதரி. நேசம்மாள் மகனுக்கு அரசாங்கத்தில் வேலை

மகனுக்கும் இடையே தேவ சமாதானம் ஏற்பட

பணித்தளம் : **தாதன்குளம்** – சகோ. ஆபிரகாம் குடும்பத்தின் சமாதானத்திற்காக

**கருங்குளம்** – தகப்பனாரை இழந்து துக்கத்தோடு காணப்படும் சகோ. பிரேம்குமார் குடும்பத்திற்காக... **அரசகுளம்** – கவிதா குடும்பத்தின் சமாதானத்திற்காக...

**விருதுநகர் மாவட்டம்**

**சாத்தூர் ரூரல் – ஸ்ரீ ரெக்காபுரம்** – பழனியம்மாள் என்கிற தாயார் குடும்பத்தில் காணப்படும் பிரச்சனைகள் மாறி சமாதானம் உண்டாக...

**ஏப்ரல் 15 வெள்ளி**

பணித்தளம் : **பண்டுதன்பட்டி** – சகோதரி. வனிதா குடும்பத்தில் சமாதானம் உண்டாக...

**தெற்குளம் பட்டி** – சகோ. பரமசிவன், அரியம்மாள் இந்த குடும்பத்தில் சமாதானம் உண்டாக

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை – ஏழாயிரம்பண்ணை கீழூர்** – சகோதரி. பொன்னுத்தாய் குடும்பத்தில் மனநிம்மதியும் சமாதானமும் உண்டாக...

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி** – விசுவாச குடும்பங்களில் கர்த்தருடைய சமாதானம் நிறைவாய் காணப்பட, பிரிவினை ஆவிகளினின்று குடும்பங்கள் விடுவிக்கப்பட... குடும்பமாய் ஆராதிக்க

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி** – சகோதரி சாந்தி அவர்கள் கணவர் டேவிட் இயேசுவை ஏற்றுக்கொள்ள, குடியிலிருந்து விடுதலை பெற, குடும்பத்தில் சமாதானம் உண்டாக, நல்ல வேலை கிடைக்க

**ஏப்ரல் 16 சனி**

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **ஊத்துக்குளி** – சகோ. ஜேம்ஸ் அவர்கள் வேலை செய்கிற இடத்தை கர்த்தர் ஆசீர்வதிக்க..... திருமண வாழ்வில் கர்த்தர் புதிய கிருபையினால் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **பொங்களூர்** – சகோதரி. லட்சுமி தனது கணவர் நிமித்தம் சோர்ந்து போய் உள்ளார். அவர் விடுதலை பெற

*குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிப்போம்*

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்** – சகோதரி. மனோகரிக்கு கர்த்தர் குழந்தை பாக்கியம் அருள...

**பணித்தளம் – தாளமுத்துநகர்** – சகோதரி. எலிசபெத், பிரபா, ஜூனி இவர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள...

பணித்தளம் – **பண்ணைவிளை** – சகோதரி. ராதிகா, ஆஷா, ஹேனா, தெய்வானை லைசா இவர்களுக்கு கர்த்தர் கர்ப்பத்தின் கனி கொடுக்க

**ஏப்ரல் 17 ஞாயிறு**

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் – **சாத்தூர் ரூரல்** – சகோதரி எலிசபெத்திற்கு கர்த்தர் குழந்தை பாக்கியம் அருள...

பணித்தளம் : **பண்டுதன்பட்டி – நங்கமங்கலம்** – சகோதரி. முத்துலட்சுமிக்கு குழந்தை பாக்கியம் உண்டாக, சகோதரி வனிதாவிற்கு குழந்தை பாக்கியம் உண்டாக

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – சகோதரி. கருப்பாய் அவர்களுக்கு குழந்தை



இதனை அறிந்த பேரரசர் வேலன்டைனை கைது செய்து சிறையில் அடைத்தார். சிறையில் சிறை அதிகாரி (Jailor) வளர்ப்பு மகள் வாய் பேசாது, கண் தெரியாது இருந்தவள் இவர் ஜெபத்தால் சுகமானாள். சிறையில் 46 நபர்பகளை கிறிஸ்துவுக்குள் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்களில் சிறை அதிகாரி குடும்பமும் மனந்திரும்பியது.

இதை அறிந்த பேரரசர் வேலன்டைனை கிறிஸ்துவை மறுதலிக்கவும் ரோம தேவதைகளை வணங்கவும், தூபங்காட்டவும் கட்டளையிட்டார். வேலன்டைன் அதை மறுத்ததும் அல்லாமல் பேரரசருக்கு கிறிஸ்துவைப் பற்றி கூறி அவரை மனந்திரும்ப நடத்த முயன்றார். அதனால் கோபங்கொண்ட பேரரசர் கி.பி. 270இல் இவரை கல்லெறிந்தும் தடியால் அடித்தும் கொல்ல கட்டளையிட்டார். அதில் இவரது உயிர் பிரியாததால் பேரரசர் வேலன்டைனை சிரச்சேதம் பண்ண கட்டளையிட்டார். வேலன்டைன் சிரச்சேதம் பண்ணப்பட்ட நாள் பிப்ரவரி 14 ஆகும். வேலன்டைன் கிறிஸ்துவின் சாட்சியின் நிமித்தமும், பரிசுத்தமான திருமண உறவுதான் சரி என்றும். உறுதியான விசுவாசத்தின் நிமித்தமும் இரத்தசாட்சியாய் கி.பி. 270 பிப்ரவரி 14இல் மரித்தார்.

பிப்ரவரி 14, வேலன்டைன் கிறிஸ்துவின் அன்பிற்காய் அவருடைய பரிசுத்த கட்டளைகளுக்காய் உயிர்விட்ட இரத்தசாட்சியாய் மரித்த நாளே ஆகும். மற்றபடி இந்த நாளுக்கும் காதலர்களுக்கும் எந்த சம்பந்தமே இல்லை.

மற்றபடி வேலன்டைன் கத்தோலிக்க குருவும் அல்ல, கத்தோலிக்க பேராயரும் அல்ல, ஏனெனில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை, நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் பேரரசர் கி.பி. 313இல் பேரரசராக பொறுப்பேற்றபின்னர்தான் நிறுவப்பட்டது. வேலன்டைன் மரித்த ஆண்டு அதற்கு முன்னர் கி.பி. 270இல் அதாவது 3வது நூற்றாண்டில் என்பதை மறவாதிருங்கள்.

## கிறிஸ்தவர்கள் இந்நாளை எப்படி கொண்டாடலாம்.

1. இரத்தச்சாட்சியான வேலன்டைன் தன் வாழ்வை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து, மரணமே அதின்நிமித்தம் நேரிட்ட போதும் விசுவாசத்தில் நிலைத்து நின்றார்.
2. கிறிஸ்துவை அறிவித்ததின் நிமித்தம் உபத்திரவம் வந்தபோதும் கிறிஸ்துவை அறிவித்து சிறையில் இருந்த போதும் மற்றவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து 46 பேர்களை ஞானஸ்நானம் வரை வழிநடத்தினார்.
3. திருமண வாழ்வின் பரிசுத்தம் என்பது மணஉறவு திருமணத்திற்கு பின்பே என்பதில் தானும் உறுதியாய் இருந்து அரச சட்டத்தை மீறி மற்றவர்களையும் இந்த பரிசுத்த வாழ்விற்கு கொண்டு வருவதில் பேரரசரின் கோபத்திற்கு உள்ளானாலும் மாறாது இருந்தார்.

இந்த மூன்றும் நமக்கு கொண்டாடப்படவேண்டிய விதத்தை விளக்குகிறது.

**முதலாவது** உங்கள் வாழ்வை அவரைப்போல் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து வாழ்வதன்மூலம் கொண்டாடுங்கள்.

**இரண்டாவது** கிறிஸ்துவின் அன்பை எந்த சூழ்நிலையிலும் எந்த பாடுகள், கேலிகள், பரிகாசங்கள் நடுவிலும் அறிவிக்க தங்காது அறிவித்து கொண்டாடுங்கள்.

**மூன்றாவது** பாலுறவு என்பது கொச்சைப்படுத்தப்பட்ட இந்நாட்களில் திருமணத்திற்கு பின்பே என்பதில் உறுதியாய் இப்புத்தகத்தின் முதல் அத்தியாய வாலிபர்களைப் போல நீங்கள் உங்களை அர்ப்பணித்து மற்றவர்களையும் இந்தப் பரிசுத்த வாழ்விற்கு அறைகூவல் விடுவதன் மூலம் கொண்டாடுங்கள்.

திருச்சபை இதை மறந்ததால் பின் நாட்களில் வந்த கற்பனை கதையாளர்களின் கதைகள் மக்களால் பின்பற்றப்பட்டு தவறான திசைக்கு திருப்பப்பட்டுவிட்டது. இதற்கு முதற்காரணம் Geoffrey Chaucer என்பவர் 14ம் நூற்றாண்டில் எழுதிய Parliment of Folues என்ற 700 வரிகள் கொண்ட கற்பனை கவிதையே. இதைத் தொடர்ந்து பல புனைவுகள் உண்மையை மறைத்துவிட்டன. போலியான சிந்தைகள் காதலர் தினமாய் மாற்றிவிட்டன. கிறிஸ்தவம் அயர்ந்து தூங்கியதன் விளைவு தூங்கிய நேரத்தில் சாத்தான் களைகளை விதைத்து விட்டான்.

கிறிஸ்துவை அறிந்த விசுவாச இளைஞனே! இதைப் புரிந்து தெளிந்து எழுந்து கிறிஸ்துவுக்காய் இரத்த சாட்சி **Valentine** போல் அவருக்கு சாட்சியாக மாறிட அழைக்கிறோம் வாருங்கள்!

14-2-2011 அன்று நடந்த Agape - 2011 இளைஞர் இனிய பெருவிழாவில் பகிர்ந்து கொள்ளப்பட்ட வரலாற்று விளக்கம் இது. அந்நாளில் வாலிபர் மாணவர்க்கென சிறகடித்துப் பறந்திடுங்கள் என்ற சிறப்பு புத்தகம் வெளியிடப்பட்டது. விலை ரூ. 10 தபால்செலவு தனி

## 2011 முப்பெரும் முகாமிற்காய் ஜெபியுங்கள்

1. முகாம் நடைபெறும் மேரி சர்ஜெண்ட் பெண்கள் மேநிலைப்பள்ளி வளாகம் தேவப் பிரசன்னத்தால் ஆளப்பட ஜெபியுங்கள்.
2. செய்தியாளர்கள் வல்லமையாய் பயன்படுத்தப்பட ஜெபியுங்கள்.
3. வெற்றி முகாமிற்கு வாலிபர்கள் 500 பேரை தேவன் அழைத்துவர ஜெபியுங்கள்.
4. குதூகல முகாமிற்கு சிறுவர்கள் 250 பேரை தேவன் அழைத்துவர ஜெபியுங்கள்.
5. வல்லமை முகாமிற்கு பெரியவர்கள் 500 பேரை தேவன் அழைத்துவர ஜெபியுங்கள்.
6. முகாமில் தங்கும் இடங்களில் தேவதூதர்களை கொண்டு தேவன் பாதுகாக்க, ஆளுகை செய்ய ஜெபியுங்கள்.
7. பிரயாணங்களை தேவன் வரத்திலும் போக்கிலும் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
8. முகாமிற்கு வர திட்டமிடும் யாவருக்கும் வசதி, பணத்தேவை ஆகிய யாவும் கட்டளையிடப்பட ஜெபியுங்கள்.
9. முகாமின் ஒழுங்குகள் ஒலி, ஒளி வசதி இருக்கை வசதி, ஹால்கள் நேர்த்தியாக செயல்பட ஜெபியுங்கள்.
10. காலநிலை, சூழ்நிலை தேவனால் ஆளப்பட்டு ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.
11. முகாமிற்கு புதிய ஆத்துமாக்கள் ஏராளம் வர ஜெபியுங்கள்.
12. முகாமின் தேவை ரூ. 2 ½ இலட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.



*படிக்கிற மாணவர்களுக்காக ஜெபிப்போம்*

பணித்தளம் : **பேட்மாநகரம் – பேரூர்** – சகோதரி. குமாரி எழுதும் 10ம் வகுப்பு தேர்வில் கர்த்தர் ஞானத்தை அருளி வெற்றி தர ஜெபிப்போம். இந்த பணித்தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனரியின் மகன் சகோ. ஜான் டேனியல் எழுதும் 10ம் வகுப்பு தேர்வில் கர்த்தர் ஜெயம் கொடுக்க... V.A.O. தேர்வு எழுதியிருக்கும் சகோதரி. முத்துலெட்சுமி சிவா இவர்களுக்கு வெற்றி கிடைக்க....

பணித்தளம் : **தாதன்குளம்** – சகோதரி ராமலட்சுமி நர்சிங் படிக்கிறார். எழுதியிருக்கும் தேர்வில் வெற்றி கிடைக்க... சகோதரி. காந்தாரிக்கு +2 தேர்வில் அதிக மதிப்பெண்களுடன் வெற்றி கிடைக்க... சுப்புலெட்சுமி, பிரியா, காந்திமதி ஆகியோருக்கு அதிக மதிப்பெண்களுடன் வெற்றி கிடைக்க...

**ஏப்ரல் 12 — செவ்வாய்**

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல் –** +2 தேர்வு எழுதிய கணேஷ், ஜேசன், டென்சிங், தங்கை ஜெபா, நிவின், சுகிர்தா ஆகியோர் வெற்றி பெற 10ம் வகுப்பு தேர்வுஎழுதும் தங்கை சர்மிளா, பெபியாள் இவர்களின் தேர்விற்காக...

பணித்தளம் : **தாளமுத்துநகர்** – +2 தேர்வில் சுமதி, சுதா, தேர்வில் வெற்றி பெற.... 10ம் வகுப்பு தேர்வு எழுதும் எட்வின், சுமதி, ஆல்ராய், இம்மானுவேல், ரூபன், சதீஷ், எலியா, யோசுவா இவர்கள் தேர்வில் வெற்றி பெற

பணித்தளம் : **பண்ணைவிளை** – குமாரபுரம் – சகோதரி. அருள்மணிக்கு நர்ஸிங் படிப்பில் இடம் கிடைக்க.... ஜெபசீலியின் மேற்படிப்பு ஆசீர்வதிக்கப்பட

**கண்ணாடிவிளை** – கரோலின், பிரிஸ்ஸி, பிரின்ஸி, ஜெனிட்டா இவர்களின் படிப்பு ஆசீர்வதிக்கப்பட

**ஏப்ரல் 13 — புதன்**

**நெல்லை மாவட்டம்**

பணித்தளம் : **அழகப்பபுரம்** – சகோதரி. சுவீதாவின் ஆசிரியர் பயிற்சிக்கான பணத்தேவை சந்திக்கப்பட... சகோதரி. அக்சா 10ம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற ஜெபிப்போம்.

பணித்தளம் : **திருவேங்கடம்** – சகோதரி. விஜி +2வில் அதிக மதிப்பெண் பெற ஜெபிப்போம் சகோ. முத்துசெல்வன் +2வில் அதிக மதிப்பெண் பெற ஜெபிப்போம்.

பணித்தளம் : **அத்திபூத்து** – சகோதரி எப்சி +2வில் நல்ல மதிப்பெண் எடுக்க ஜெபிப்போம்

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி** – கலைச்செல்வி, பொன்மணி தேர்வின் போது பலவீனம் தாக்காமல் இருக்க, நல்ல மதிப்பெண்கள் பெற

**ஏப்ரல் 14 — வியாழன்**

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **விராலிப்பட்டி**

சகோதரி. இந்துராணியின் மகன் பாலு நன்றாக படிக்க.... சகோதரிகள் பிரவினா, முத்துப்பிரிய மலர், +2வில் நல்ல மதிப்பெண் பெற ஜெபிப்போம்.

*குடும்பங்களில் தேவன் சமாதானம் கொடுக்க ஜெபிப்போம்*

பணித்தளம் : **பேட்மாநகரம் – முத்துசாமிபுரம்** – சகோதரி. ரூத்திற்கும் அவரது

மகள்கள், சகோ. லட்சுமணன் இவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட...

**அணைக்கரப்பட்டி** – சகோ. மாரிமுத்து, சகோ. கருப்பசாமி இவர்கள் இரட்சிக்கப்பட...
பணித்தளம் : அய்யனேரி – **புளியங்குளம்** – சகோதரி. சங்கீதாவின் பெற்றோர் இரட்சிக்கப்பட... சகோ. மாரியப்பன், தங்கமாரி தம்பதியினர் இரட்சிக்கப்பட...

**சிப்பிப்பாறை** – சின்னத்தாயம்மாள் மகன் ராஜாராம் இரட்சிக்கப்பட..

**ஏப்ரல் 9** **சனி**

பணித்தளம் : **பண்டுதன் பட்டி** – சகோதரி. வனிதாவின் கணவர் இரட்சிக்கப்பட... தெற்கு குளம்பட்டி பரமசிவன் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட... சகோதரி. அன்னலட்சுமி இரட்சிக்கப்பட...
பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்** – பொன் சுபா என்ற தங்கை இரட்சிக்கப்பட...

**அப்பனம்பட்டி** – முருகலெட்சுமி என்ற தங்கையின் தகப்பனார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட....

பணித்தளம் : **முக்கூட்டுமலை** – சகோ. இருதயராஜ் மனந்திரும்பி சபைக்கு வர... சகோதரி. கிரேஸ் குடும்பம் முழுவதுமாக இரட்சிக்கப்பட்டு ஆலய ஆராதனைக்கு கடந்து வர...

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – சகோ. சீனிவாசன், வீரையா, சண்முகம், மகேந்திரன், பழனிசாமி, சேகர் சந்திரன் இவர்கள் இரட்சிக்கப்பட

**ஏழாயிரம்பண்ணை** – சகோதரி சரிதா இயேசுவை ஏற்றுக்கொண்டு மனசமாதானமாக வாழ... சகோ. ஜோசப்ராஜ் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு, பெற்றோரை மதித்து வாழ....

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்** – டீச்சர் டிரெயினிங் படிக்கும் சசி என்ற தங்கைக்கு படிக்க தேவன் ஞானமும் கிருபையும் அருள... பொன்சுபா என்ற தங்கை நன்றாகப் படிக்க...

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி** – ஆவுடைத்தாய் மகள் மாரீஸ்வரி எழுத இருக்கும் தேர்வில் அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெற....

**ஏழாயிரம்பண்ணை** – சிறுவன் எபினேசர், ஜெபின் இவர்களுக்கு படிப்பில் தேவன் ஞானம் அருள....

**ஏப்ரல் 10** **ஞாயிறு**

**நெல்லை மாவட்டம்**

பணித்தளம் : **அழகப்பபுரம்** – சகோதரி. செல்வம் சகோதரி. ஜெயமணி, அஜிதா, ஜோதி, விஜய், வள்ளியூர் சகோதரி. சாந்தி அவர்கள் மகன் அலெக்ஸ், மகள் பெல்சி ஞானஸ்நானம் பெற ஜெபிக்கவும்.

பணித்தளம் : **அத்தியூத்து** – சகோ. பண்டாரம், சகோதரி. நந்தினி, சோனியா, தேன்மொழி மனந்திரும்ப ஜெபிப்போம். சகோ. ராஜா, இசக்கிராஜா குடியிலிருந்து விடுதலை அடைய ஜெபிப்போம்.

**அய்யனேரி – புளியங்குளம்** – சகோதரி. சங்கீதாவிற்கு கர்த்தர் ஞானம் அருள....

பணித்தளம் : **முக்கூட்டுமலை** – 12ம் வகுப்பு படிக்கும் மல்லிகா நன்றாக தேர்வு எழுத, தேவனுக்கு சாட்சியாக வாழ..... 10ம் வகுப்பு படிக்கும் தம்பி செல்லகுமார் நன்றாகப் படிக்க, தேர்வு எழுத...

**ஏப்ரல் 11** **திங்கள்**

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி – கொட்டுகாலம்பட்டி** சகோதரிகள் நல்மணி, விஜயா, பெரியம்மா இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.



## கர்த்தரைத் துதிப்போம் வாருங்கள்!

**ஏப்ரல் 1** **வெள்ளி**

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **தொட்டம்பட்டி** – சகோதரி. லட்சுமி, அழம்மாள் ஆகியோருக்கு காய்ச்சல் சுகமானதிற்காகவும், சகோ. சுப்பையாவுக்கு வாந்தி, தலைச்சுற்று சுகமானதிற்காகவும் தேவனைத் துதிப்போம்

**அப்பாவுபிள்ளை பட்டி** – சகோ. வேல்முருகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை யானதிற்காய் நாம் கர்த்தரைத் துதிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **பொங்கலூர் – தொட்டிப்பளையம்** – விசுவாச குடும்பத்தில் உள்ள சகோதரர் சேகர் அவர்களை இருசக்கர வாகன விபத்திலிருந்து கர்த்தர் காத்தார் தேவனைத் துதிப்போம். இங்கு திருமுழுக்கு பெற்ற நான்கு பேரும் முடிவுபரியந்தம் தேவனுக்காய் வாழ தேவனைத் துதிப்போம். **கெங்கநாயக்கன்பாளையம்** – பாரதியார் நகரில் ஜெபக்கூட்டம் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஏப்ரல் 2** **சனி**

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி – தோப்புப்பட்டி** – சகோ. இன்னாச்சி அவர்களுடைய இரு மகன்களுக்கும் திருமணம் நடைபெற்று மூன்று வருடம் ஆகியும் குழந்தைகள் இல்லை அதற்காக ஜெபித்தோம். இரு மருமகள்களும் கர்ப்பம் தரிக்க கிருபை செய்தார். சபை விசுவாசிகள் மூன்று பேருக்கு அரசு வீடு கட்டி கொடுத்துள்ளது. இதற்காக தேவனைத் துதிப்போம், சகோதரி தெரசுமேரி ஆஸ்த்துமா வியாதி நீங்கியதற்காக தேவனைத் துதிப்போம்.

**கல்பாளையத்தான் பட்டி** – சகோதரி. ஜூலி – இடது கை அசைக்க முடியாமல் இருந்த நிலையில் அற்புதம் செய்தார். கடந்த மாதம் முதல் வாலிபர் சிறப்பு நிகழ்ச்சியான இயேசுவோடு இனிய மாலை கூடுகையில் 24 பேர் கலந்து கொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**கொட்டுகாலம்பட்டி** – சுகர் வியாதியால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் இருந்த சகோதரி விஜயா அவர்களை சுகமாக்கிய தேவனைத் துதிப்போம்.

**ஏப்ரல் 3** **ஞாயிறு**

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **பண்டுதன் பட்டி – நக்கமங்கலம்** – சகோதரி வீரம்மாள் மங்கலாய் தெரிந்த வலது கண், இப்போது தெரிகிறதற்காய் தேவனைத் துதிப்போம், 10 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த குடிதண்ணீர் தடை நீங்கி, ஆலயத்திற்கு முன்பாக தண்ணீர் பைப் போட்டதற்காக தேவனைத் துதிப்போம்

பணித்தளம் : **முக்கூட்டுமலை** – சகோதரி சுஜாதா பி.காம் இறுதி ஆண்டு தேர்வில் வெற்றி பெற்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **சாத்தூர்** – நமது ஜெபத்தை கேட்டு சகோதரி விமலாவிற்கு திருமணம் ஒழுங்கானதற்காக தேவனைத் துதிப்போம். சகோ. செந்தில்குமார் திருமணம் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**சிவகாசி** – மானகசேரி சிறுவர் ஜெபக்குழுவில் அதிகமான சிறுவர் சிறுமியர் மாணவ மாணவியர் (40க்கும் மேற்பட்டோர்) கலந்து கொண்டார்கள். பீடி குடிக்கிற 3 பேர் இனி நாங்கள்

பீடி குடிக்கமாட்டோம் என்று கூறினார்கள். இவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **பழையசெந்நெல்குளம்** – மெர்லின் என்ற வாலிப சகோதரிக்கு இருந்த சரீர பெலவீனங்களில் இருந்து தேவன் கொடுத்த விடுதலைக்காய் கர்த்தரைத் துதிப்போம். முதன் முதலாக சபையில் நடத்தினதாக முழு இரவு ஜெபத்தில் கலந்து கொண்டதான குடும்பங்களில் வேலை வாய்ப்புகளையும் பிரிந்த குடும்பத்தை தேவன் இணைத்ததற்காய் கர்த்தரைத் துதிப்போம். சந்தனமாரி என்ற சிறுமியை பெரிய அம்மை நோயிலிருந்து காத்த கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 4** **திங்கள்**

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **அழகப்பபுரம் – வள்ளியூர், மீனவன்குளம்** ஆகிய இடங்களில் மூன்று பள்ளிகளில் மாணவர் ஆலோசனை கூடுகை நடத்துவதற்கு தேவன் கிருபை செய்தமைக்காக துதிப்போம்

பணித்தளம் : **திருவேங்கடம்** – இங்கு சகோ. பால்ராஜ் வீடு கட்டி பிரதிஷ்டை முடித்ததற்காக தேவனைத் துதிப்போம். சல்லம்பட்டி கிராமத்தில் சகோ. வெள்ளைச்சாமி வீட்டில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட ஆராதனைக்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **வடமலாபுரம்** – சகோ. விஜயகுமார் – சகோதரி சுமித்ரா இவர்கள் சபைக்கு ஸ்பீக்கர், மைக், ஆம்ப்ளிபையர் முதலானவை வழங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம். ஊழியராகிய எங்கள் மகன் மனம் திருந்தி ஞானஸ்நானம் எடுக்கவும், அவன் வேலைக்கு போக TVS Champ வாகனம் வாங்கவும், கர்த்தர் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **மேலச்செவல்** – சகோ. சவுந்தரராஜன் மகன் கால் முறிவில் சுகம் கிடைத்ததற்காகவும் மகள் திருமணத்தை நடத்தி வைத்ததற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஏப்ரல் 5** **செவ்வாய்**

சகோதரி. வசந்தா அவர்கள் கணவர் வெளிநாட்டிலிருந்து தொடர்பு கொள்ளாமல் இருந்தார் ஜெபித்தோம். இப்பொழுது போன் செய்கிறார். கர்த்தரைத் துதிப்போம். சகோ. ராமகிருஷ்ணன் அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக இருக்கிறார். அவருடைய முழு குடும்பமும் இரட்சிக்கப்பட தேவனைத் துதிப்போம். சகோதரி. சரோஜா அவர்கள் கீழே விழுந்து 2 மாதமாக நடக்க முடியாமல் இருந்தார்கள். இப்பொழுது நடக்க கர்த்தர் கிருபை செய்தார் துதிப்போம்.

**ஏப்ரல் 6** **புதன்**

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **தாதன்குளம் – சினார்குளம்** – சகோ. ஏசுதாசன் கால் நடக்க முடியாமல் இருந்தார்கள். கர்த்தர் அனைவரின் ஜெபத்தைக் கேட்டு நடக்க செய்தார். இப்போது மீண்டும் கொத்தனார் வேலைக்கு போக கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

பணித்தளம் : **ஸ்ரீ மூலக்கரை** – சகோ. ஆனந்தராஜ் மனைவி ஜெனிபருக்கு இரட்டை ஆண்குழந்தை சுகப்பிரசவமாக கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்

பணித்தளம் : **பண்ணைவிளை** – இளைஞர் இனிய பெருவிழாவில் முதல் முறையாக சாயர்புரம் Arts College Hostel, Engg. College Hostelல் உள்ள மாணவிகள் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம். சாயர்புரம் Arts College ஜெபக்குழு Studentsக்கு நல்ல result கிடைத்ததற்காகத் தேவனைத்துதிப்போம். சுப்பிரமணியபுரம் – J.P. ஹோமில் சமையலுக்கு ஒரு நல்ல தாயாரைக் தேவன் கொடுத்தற்காக துதிப்போம்.



பணித்தளம் : **திருக்களூர்** கௌரி என்ற குழந்தைக்கு பெலவீன்களிலிருந்து தேவன் சுகம் கொடுத்ததற்காக துதிப்பேம்.

**ஏப்ரல் 7** **வியாழன்**

கணவரோடு மீண்டும் சேர்ந்து வாழ கிருபை செய்தபடியால் தேவனைத் துதிப்போம்.

சகோ. ஜாண்சன் காலில் இருந்த புண் ஆற கர்த்தர் கிருபை செய்தபடியால் துதிப்போம்.

சகோ. சுசிலன் திருமண காரியத்தை கர்த்தர் ஒழுங்கு செய்தபடியால் துதிப்போம்.

| |
|---|
| நெல்லை மாவட்டம் முக்கூட்டுமலை பணித்தளம் நமது கிருபையின் ஆலயத்தில், 1-3-2001 அன்று நடந்த வாக்குத்தத்த ஆராதனையில் சகோதரி இலட்சுமி (32 வயது) என்ற 6 வருடம் காது கேட்காத சகோதரி தனது தாயாரோடு கலந்து கொண்டார்கள்! கர்த்தர் ஆராதனையின் செய்தி வேளையில் கேட்கும்படி காதுகளைத் திறந்தார். தேவனைத் துதியுங்கள். |

# பணித்தளங்களுக்காய் முழங்காலில் நிற்போம்

**தூத்துக்குடி மாவட்டம்**

*இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்*

பணித்தளம் : **பேட்மாநகரம்** – சகோதரி. கார்த்திகா, சகே. நடராஜன் இரட்சிக்கப்பட.

**முத்துசாமிபுரம்** – சகேதரி லட்சமி குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட... சகோ. பட்டுராஜ் இரட்சக்கப்பட...

**சுந்தரலிங்கநகர்** – சகோதரி. தெய்வானை குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட..

பணித்தளம் : **தாதன்குளம்** – சகோதரி. ராமலெட்சுமியின் சகோதரன் அண்ணன் இரட்சிக்கப்பட

பணித்தளம் : **திருக்களூர்** – சகோதரி. சரோஜா, சகோதரி. ஆழ்வார், பேச்சிமுத்து, சகோ. பெருமாள், சகோ. பார்த்திபன், சகோதரி சங்கரா ஆகியோரின் இரட்சிப்பிற்காக....

பணித்தளம் : **பண்ணைவிளை – சாயர்புரம், Arts College Hostel** - பதுமராகம் என்ற மாணவியின் ஊர் மக்கள் இரட்சிக்கப்பட, இங்கு படிக்கிற கிறிஸ்தவல்லாத மாணவிகள் இரட்சிக்கப்பட... **Pope Eng. College Hostel :** இங்கு தங்கி படிக்கிற ராஷா என்ற தங்கை இரட்சிக்கப்பட.... Final Year படிக்கிற மாணவிகள் Project ஆசீர்வதிக்கப்பட இவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட

**சுப்பிரமணியபுரம்,** J.P. Home – இங்கு தங்கியிருக்கிற பிள்ளைகளின் குடும்பத்தினர்கள் முழுவதும் இரட்சிக்கப்பட...

**பேரின்பபுரம்** – லட்சுமி என்ற தங்கை இரட்சிக்கப்பட

**ஏப்ரல் 8** **வெள்ளி**

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்** – சகோ. டேவிட் தகப்பனார், சகோ. மதன் இந்தப் பகுதியிலுள்ள சிறுவர்கள் இரட்சிக்கப்பட

**திருவிந்தான்பட்டி** – சகோ. பெருமாள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட, கருப்பம்மாள் விக்கிரக ஆராதனையிலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட....

**ஆலம்பட்டி** – சகோதரி. முனியம்மாள், சகோதரி. கருப்பாயி அவர்களின் மகன்,